முருகப்பெருமான் துணை

**மகான் சிவானந்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**12.11.2022**, சனிக்கிழமை

1. தான தரும உயர் வழிதனை
தரணியோர் பின்பற்றிவர
ஞானமாக அருளி வந்த அரங்கனே
ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது துலை திங்கள்
குறைவிலா இருபானாற் திகதி காரிவாரம்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 26 ம் நாள் 12.11.2022 சனிக்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசிதனை
தேசிகனுக்கு சிவானந்தர் யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
உண்மை ஞான தரும வழிகள்
ஞானமாக அரங்கமகான் அருள
நம்பிக்கை வைத்து மக்கள் வர
4. வருகவே நிலைமைகள் மாறும்
வந்த நோக்கம் அவரவர்க்கும்
கருமவினை போக்கும் வண்ணம்
கருணை வழிகளாக மாறி தேற்றம்
5. தேற்றம் குருவருளாகக் கிட்டும்
தேசிகனின் தீட்சை பலமும்
ஆற்றல் கூட்டி தேகமனபலமுடன்
அறிவுத் தெளிவு திடமும் தந்து
6. தந்துமே ஞானவான்கள் எனும்
தனித்துவமும் தந்து அருளி
விந்தைபட ஞானிகள் ஆக்கும்
வினையிலா இனி பிறவாத வண்ணம்
7. வண்ணமுடன் முழுமை தன்னை
வழங்கி இந்தக் கலியிலும்
எண்ணமெல்லாம் சேவை வழி
இயக்கியே உலகினை மாற்றும்
8. மாற்றும் மகா சக்தியாக மாறி
மனுதர்மம் காத்து இனிதே
ஆற்றல்பட ஞான ஆட்சியை
அமைத்தருளும் அகிலமெங்கிலும்
9. அகிலமே வியக்க சேவை ஆற்றும்
அரங்கமகான் பிரணவக் குடிலை
மகிழவே கலியுக மக்களும்
மணமுவந்து அனுகி சரணாகதி

10. சரணாகதி அடையவே மாற்றம்
சடுதி கண்டடைந்து உலகம்
சரணாகதி மிக்க ஞானிகள் வாழும்
சத்தியயுகம் ஞானயுகமாகத் தேறி
11. தேறியே ஞானசித்தர் காலமும்
தேசிகனால் ஞான ஆட்சியும் மலரும்
ஆறுமுகனார் அனுகூலம் படவே
அருளிய அனுகூல ஆசி முற்றே

—சுபம்—